# வாக்குமூலம்

## கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை

## வழக்கு எண். SC.No.105/2025

## வழக்கு சாட்சி: PW.4

## தேதி: 07.01.2026

**பெயர்:** கனகசபாபதி **ஜாதி:**
**தந்தை பெயர் :** **தொழில்:**
**கிராமம்:** **சமயம்:**
**தாலுகா:** **வயது:**

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்)

**முதல் விசாரணை:**

நான் இலந்தன்குடியில் குடியிருந்து வருகிறேன். சிவகங்கையில் உள்ள கீரின் ரைட் பைனான்ஸ் கடையில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். இந்த வழக்கில் இறந்துபோன கணேசன் மகள் வனிதாவை நான் திருமணம் செய்திருக்கிறேன். நாட்டாகுடி கிராமத்தில் விநாயகர் கோவில், கருவாளுடைய அய்யனார் கோவில், லட்சுமி அம்மாள் கோவில் கும்பாபிஷேகம் 2024ம் வருடம் செப்டம்பர் மாதம் 7, 8 தேதிகளில் நடந்தது. அந்த கோவில் கும்பாபிஷேகத்திற்கு கிராமத்தில் உள்ள அனைவரும் சேர்ந்து என் மாமனாரை கோவில் கும்பாபிஷேகத்திற்கு தலைவராக நியமித்தார்கள். அந்த கும்பாபிஷேகத்திற்கு முன்பு விநாயகர் சிலையை யாரோ சமுதாய கிணற்றில் போட்டுவிட்டார்கள். கிராமத்தில் உள்ளவர்கள் விசாரித்ததில் ஆஜர் எதிரி குண்டுமணி நான் தான் தூக்கி கிணற்றில் போட்டேன் என்று சொன்னான். அதன்பிறகு விநாயகர் சிலையை தண்ணீர்க்குள் இருந்து எடுத்து கும்பாபிஷேகத்தை நடத்தி விட்டார்கள். அதன் பிறகு கிராமத்தில் உள்ள சின்டெக்ஸ் டேங்கை எதிரி உடைத்ததை என் மாமனார் பார்த்து கேட்டார் என்றும் அதில் என் மாமனாருக்கும், எதிரிக்கும் பிரச்சனை வந்ததாக என் மாமனார் சொன்னார். அதன் பிறகு 48 வது நாள் மண்டல பூஜைக்கு ரெடி பண்ணினார்கள். அந்த பூஜைக்கு முன்பாக எதிரி குண்டுமணி என் மாமனார் கணேசனை 04.11.2024ம் தேதி காலை 5.15 மணிக்கு வெட்டி விட்டார். அவர் வெட்டிய போது நானும், என் சின்ன மாமனார் ராமலிங்கம், அந்த ஊரிலுள்ள சேகர் ஆகிய மூன்று பேரும் அந்த ஊரிலுள்ள

விநாயகர் கோவில் அருகே நின்று பேசிக்கொண்டிருந்தோம். என் மாமனாரும், என் மாமியாரும் ரெகுலராக காலை 5.15 மணிக்கு டீக்கடையை திறப்பதற்காக வருவார்கள். அன்று அவர்கள் வந்து என் மாமனார் திறக்க ரெடி பண்ணி கொண்டிருந்த போது எதிரி குண்டுமணி அவரை வெட்டிவிட்டார். நாங்கள் சத்தம் கேட்டு ஓடி வந்தோம். எதிரி எங்களை அருவாளை காட்டி மிரட்டி விட்டு அவருடைய ஸ்கூட்டி பைக்கை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார். நாங்கள் என் மாமனாரை போய் பார்த்தோம். ஊரில் உள்ளவர்கள் 108 க்கு போன் பண்ணினார்கள். அவர்கள் வந்து பார்த்து இறந்துவிட்டதாக சொன்னார்கள். பிறகு பிரைவேட் ஆம்புலன்ஸ் வரவழைத்து சிவகங்கை GH க்கு கொண்டுவந்தோம். என் மாமியார் மற்றும் என் நாத்தனார் ராஜாத்தீ இரண்டு பேரும் திருப்பாச்சேத்தி காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க போனார்கள். அந்த அருவாள் 1 1/2 நீளமுள்ள மரப்பிடி போட்ட அருவாள். என்னிடம் காண்பிக்கப்படும் சா.பொ.ஆ.1 அருவாள் எதிரி வெட்டிய அருவாள். போலீசார் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சா.பொ.ஆ.1 அருவாளின் முனை உடைந்து இருக்கிறது என்றால் சரிதான். நான் பைனான்ஸ் கம்பெனியில் மேனேஜராக எத்தனை ஆண்டுகளாக வேலை செய்கிறேன் என்றால் தற்போது வேலை செய்யும் கம்பெனியில் 1 வருடம் வேலை செய்கிறேன், அதற்கு முன்பு வேறு கம்பெனியில் வேலை செய்கிறேன். அந்த வேறு கம்பெனியும் சிவகங்கையில் தான் வேலை செய்தேன் என்றால் சரிதான். அந்த நிறுவனத்தில் பணியாளர்கள் எனக்கு கீழே வேலை செய்கிறார்கள் என்றால் சரிதான். எனக்கு இரண்டு குழந்தைகள். என் மகள் 12ம் வகுப்பு படிக்கிறாள், மகன் LKG படிக்கிறான். நான் என் மனைவி, குழந்தைகள் சிவகங்கையில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். என் மகள் LKGலிருந்து 12ம் வகுப்பு வரை சிவகங்கையில் தான் படித்து வருகிறார் என்றால் சரிதான். என் நாத்தனாரும் என் மைத்துனரும் சிவகங்கையில் தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். என் மாமனார் இறந்த சம்பவம் கேள்விப்பட்ட அதன் பிறகு தான் நாங்கள் அனைவரும் காரில் போனோம் என்றால் சரியல்ல. நாங்கள் கேள்விப்பட்டு பின்பு போனதால் தான் என் நாத்தனார் போய் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. சம்பவ நேரத்தில் எதிரி என்ன கலர் டிரஸ் போட்டிருந்தார் என்றால் 5.15 மணி என்பதால் என்ன கலர் டிரஸ் என்று

தெரியவில்லை. நாட்டாகுடியில் பெரிய தண்ணீர் டேங்க் இருக்கும் விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த டேங்க் எத்தனை அடி உயரம் என்றால் 30 லிருந்து 35 அடி இருக்கும். அந்த டேங்கிற்கு இரும்பு கைப்பிடியுடன் கூடிய ஏணி மேலே செல்வதற்கு அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் மீது ஏறி தான் உள்ளே சென்று தண்ணீரை சுத்தம் செய்வதற்கு வாய்புள்ளது என்றால் சரிதான். அந்த தண்ணீர் கொள்ளளவு உள்ள டேங்க் 20 அடி இருக்குமா என்றால் 10 அடி இருக்கும். கண்மாய்க்குள் இருக்கும் கிணற்றின் ஆழம் எவ்வளவு என்று தெரியுமா என்றால் தெரியாது. கும்பாபிஷேகம் செய்த போது யாகம் குண்டடங்கள் அமைத்து தான் கும்பாபிஷேகம் நடந்தது என்றால் சரிதான். நான் நிதி நிறுவனத்தில் முழு நேரமாக பணியாற்றி வருவதால் சம்பவ தேதி நேரத்தில் சம்பவ இடத்திலேயே இல்லை என்றால் சரியல்ல. என் மாமியார் என் மாமனார் இறந்த தகவலை சொன்னதன் அடிப்படையில் நான், என் மனைவி, நாத்தனார் ஆகிய அனைவரும் சிவகங்கை மருத்துவமனைக்கு சென்று தான் இறந்துபோன என் மாமனாரை பார்த்தோம் என்றால் சரியல்ல. அதனால் தான் நான் புகார் கொடுக்க செல்லவில்லை என்றும் என் மாமனாரை மருத்துவமனைக்கு கொண்டு போன போதும் உடன் வரவில்லை என்றால் சரியல்ல. என் மாமனாரை அந்த ஊரிலுள்ள இரு வேறு சமுதாயத்திற்கிடையே பஞ்சாயத்து தலைவர் தேர்ந்தெடுப்பது சம்பந்தாக இரு சமூகத்திற்கிடையே ஏற்பட்ட முன் விரோதம் காரணமாக என் மாமனாரை அடையாளம் தெரியாத நபர்கள் குத்தி கொலை செய்து விட்டார்கள் என்றும், காவல்துறையினர் இதுசம்பந்தமாக முழுமையான விசாரணை செய்யாமல் இந்த எதிரி மீது பொய்யாக வழக்கு போட்டார்கள் என்றும், அதன் அடிப்படையில் காவல்துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**